# அழைக்கப்பட்டவனும் அழைத்தவரும்

**பின்பு கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே அவனுக்குத் தரிசனமானார். அவன் பகலிலே உஷ்ணவேளையில் கூடாரவாசலிலே உட்கார்ந்திருந்து, (ஆதி 18:1)**

**நோவாவின்** குமாரனான **காமின்** மகன் பெற்ற **கானானின்** வழியில் வந்த சந்ததியாகிய எமோரியர்களுள் ஒருவன் "**மம்ரே**." மம்ரே குடியிருந்த சமபூமி, "மம்ரேயின் சமபூமி" என்று அவனது பெயரினாலேயெ அழைக்கப்பட்டது. ஆபிராம் மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலேயே குடியிருந்தான் (ஆதி. 14:13).

எமோரியர்கள் கர்தருக்குப் பிரியமில்லாத வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தவர்கள்; **"எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை"** (ஆதி 15:16) என்பதே அவர்களைக் குறித்து ஆபிராமுக்கு கர்த்தர் செய்த அறிமுகம்; அதுவே, எமோரியர்கள் யார்? என்பதை அடையாளங்காட்டிக்கொடுக்கப் போதுமானது. எமோரியர்களுக்கும் யெகோவாவுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை; தெய்வமாக அவரை அவர்கள் ஏற்றுக்கொள்ளவும், வணங்கவும் இல்லை; அந்நிய தெய்வங்களையே அவர்கள் வணங்கிக்கொண்டிருந்தவர்கள். ஆபிராம் மம்ரேயின் சமபூமியில் குடியிருந்தபோது, எமோரியரின் அநேக அக்கிரமங்களைக் கண்கூடாக அவன் கண்டிருக்கக்கூடும்; அப்படிப்பட்ட அக்கிரமம் நிறைந்த எமோரியர்களின் மத்தியில், யெகோவாவுக்காகப் பரிசுத்தமாக வாழுவது அபிராமுக்கு ஓர் சவாலானதாகவே இருந்திருக்கும். ஆபிராமின் தெய்வம் **யெகோவா** என்பது எமோரியரின் அறிவுக்கு எட்டியிருக்கும். தங்களது தெய்வங்களை ஆபிராம் வணங்காததை நிச்சயம் எமோரியர்கள் கண்டிருக்கக்கூடும்; என்றாலும், **ஆபிராம், அவர்களால் இழுக்கப்பட்டுப்போய்விடவில்லை**. அக்கிரமத்தின் நிமித்தம் ஒருவேளை ஆண்டவர் மம்ரேயின் சமபூமிக்குப் போக விரும்பாவிட்டாலும், **அழைக்கப்பட்டவன் நிமித்தமாக அங்கே போகவேண்டிய விருப்பம் ஆண்டவருக்கு உண்டானது**. நாம் வாழும் சூழ்நிலைகள் ஆண்டவரை

வருத்தமடையச் செய்பவைகளாக ஒருவேளை காணப்படக்கூடும்; அனால், **அவர் வாழும் மனிதர்கள்** எங்கே இருந்தாலும், அங்கே அவர் வருவதற்கு எவ்வித தடையும் இல்லை. **அழைக்கப்பட்டவனையே அழைத்தவர் தொடருகின்றார்** என்பதற்கு ஆபிராமின் வாழ்க்கை ஓர் ஆதாரம்.

எகிப்து, யெகோவாவுக்கு விரோதமானதோர் தேசம்; யெகோவாவை தெய்வமாகக் கொண்டிராத தேசம்; என்றாலும், யோசேப்பு எகிப்துக்குச் சென்றபோது, **யோசேப்போடு கூட கர்த்தரும் அங்கே சென்றார்**; எகிப்து ஆண்டவருக்கு இடமளிக்காவிட்டாலும், யோசேப்பின் இருதயம் அவருக்கு இருக்க இடமளித்திருந்ததே அதன் ரகசியம். அப்படியே, **அழைக்கப்பட்ட மோசே எகிப்துக்குச் சென்றபோது, அவனோடு கூட நின்று செயலாற்றினார் ஆண்டவர்**.

அப்போஸ்தலர்களின் நாட்களில், பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்த சதுசேயசமயத்தாரனைவரும் எழும்பி, பொறாமையினால் நிறைந்து, அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்; என்றாலும், கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத்திறந்து, அவர்களை வெளியே கொண்டுவந்தான் (அப் 5:17-19). இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் சிறைச்சாலையில் ஒருவரும் இருந்திருக்க வாய்ப்பில்லை; என்றபோதிலும், **அப்போஸ்தலர்கள் சிறைக்குச் சென்றபோது, தூதனும் சிறைக்குள்ளே நுழைவதற்கு எவ்வித சிரமமும் இல்லையே**.

அதைப்போலவே, சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அக்கினிச் சூளையில் வீசப்பட்டபோது, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பிரமித்து, தீவிரமாய் எழுந்திருந்து, தன் மந்திரிமார்களை நோக்கி: மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர்களாக அக்கினியிலே போடுவித்தோம் என்றான்; அவர்கள் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: ஆம், ராஜாவே என்றார்கள். அதற்கு அவன்: இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான் (தானி 3:24,25). **அழைக்கப்பட்டவர்களை உலகம் எங்கே வீசினாலும், அவர்களைத் தேடியே அவரும் செல்கிறார்; அக்கினியும் அவரைத் தடுத்து நிறுத்த முடியாது**.